1978 செப்டம்பர் 11]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கனம் உறுப்பினர் இடையில் வந்தார்கள். ஒரே ஒரு கேள்வியைக் கேட்டு அமைச்சரிடத்தில் பதில் பெறலாம், ஆனால் அவர்கள் ஏற்கனவே அமைச்சர் சொல்லி முடித்த விவரங்களையே கேட்டுக்கொண்டு இருக்கிறார்கள். நடவடிக்கை எடுத்துக் கொண்டு இருக்கிறோம் என்று சொல்லிவிட்டாரே? மேலும் நேரத்தை வீணாக்க வேண்டுமா? சீக்கிரம் முடிக்க வேண்டும்.

திரு. வி. கே. கோதண்டராமன்: நேரத்தை வீணாக்கவில்லை. அமைச்சர் திறமையானவர், எத்தனை கேள்விகள் கேட்டாலும் பதில் சொல்லும் சாமர்த்தியம் உடையவர். ஆகவே நீங்கள் தடுக்காதீர்கள். இந்த 10 வருஷ காலத்தில் மேலும் இதுபோன்ற எத்தனை சொத்துக்கள் விற்பனை செய்யப்பட்டு இருக்கின்றன என்பதைச் சொல்ல முடியுமா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: பேரவைத் தலைவரவர்களே, மூலக் கேள்வி கேட்டவரே திரும்பவும் துணை வினா கேட்கிறார் என்ற காரணத்தால் ஏற்கனவே சொன்ன பதில் என்றாலும் கொஞ்சம் விளக்கமாகச் சொல்கிறேன். 55 குற்றச்சாட்டுகள் சம்பந்தப்பட்ட சொத்தின் மதிப்பு ரூ. 7 கோடி. ரூ. 2 கோடி அளவிற்கு உள்ள சொத்துக்கள் அதனுடைய மார்க்கெட் நிலவரப்படி விற்பனை செய்யப்படவில்லை; அல்லது மாற்றம் செய்யப்படவில்லை என்று புகார் வந்து இருக்கிறது. அது குறித்து தீவிரமாக இன்று நாம் பரிசீலனை செய்து வருகிறோம். அதற்குச் சம்பந்தப்பட்டவர்கள் யார் என்பது அந்த விசாரணையின் முடிவில்தான் நமக்குத் தெரியும். அதற்குப் பிறகுதான் தீவிரமாக நடவடிக்கை எடுக்க முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

செயற்கை வைரம் தயாரிப்பு

*வினா எண் 149—திரு. கே. சௌந்திரராசன்: மாண்புமிகு கிராமத் தொழில் அமைச்சர் கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) செயற்கை வைரம் தயாரிக்கும் தளம், டப்பிகள், செயற்கை வைரத் தொழிலாளருக்குக் கிடைக்காமல் இடைத்தரகர்கள் இலாபம் பெறுவது இந்த அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதைப் போக்கிட அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது:

(அ)-(ஆ) செயற்கை வைரம் தயாரிப்பாளருக்கு தளம் என்ற கச்சாப்பொருள் கிடைப்பதில் உள்ள சிரமங்கள் குறித்து தொழில் வணிகத் துறை அதிகாரிகள் வேண்டிய நடவடிக்கைகள் எடுத்து இப்பொழுது அந்தப் பொருளை ஒழுங்கான முறையில் விநியோகம் செய்யும்படி செய்திருக்கின்றனர்.